# 27. ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை வளர்ச்சி

இந்தியப் பொருளாதாரம் இன்றும் வேளாண்மையைச் சார்ந்த கிராமப் பொருளாதாரமாக இருக்கின்றது. ஏறத்தாழ 70% மக்கள் இன்றும் வேளாண்மையை நம்பியே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்திய நாட்டு வருவாயில் 1950-51 இல் பாதிக்குமேல் (51.3%) வேளாண்மை, வேளாண்மையைச் சார்ந்த துறைகளின் மூலம் கிடைத்தன. 1997-98 இல் நாட்டு வருவாயில் வேளாண்மையைச் சார்ந்தவற்றின் பங்கு 26.45ஆக உள்ளது. வேளாண்மை வளர்ச்சியடையாமல் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சியடையாது. ஆதலால் வேளாண்மையின் வளர்ச்சி ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் எப்படி இருந்ததென ஆராய்வது தேவையாகின்றது.

*திட்டத்திற்குமுன் இந்திய நிலை:* நாம் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி முன்னேறத் தொடங்குவதற்கு முன்னால் இந்திய வேளாண்மை தாழ்வுற்ற நிலையிலிருந்தது. பருவமழையில் சூதாட்டமாக இருந்த வேளாண்மையை நம்பி வாழ்ந்த விவசாயிகள் பஞ்சத்திலும் பட்டினியிலும் வாடினர். கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனில் மடிந்த இந்திய விவசாயிகளால் வேளாண்மையில் புதுமையைப் புகுத்த முடியவில்லை. உழைத்து உயிர்வாழ ஒரு வாழ்க்கை முறையாக வேளாண்மை இருந்தது. இந்தியா இரண்டாகப் பிரிந்த பொழுது வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டது. பிரிக்கப்பட்ட இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் 82% இருந்தனர். ஆனால் நெல்சாகுபடி செய்த நிலத்தில் 69 சதவிகிதமும், கோதுமை சாகுபடி செய்த நிலத்தில் 65 சதவிகிதமும், நீர்ப்பாசன வசதி பெற்ற நிலத்தில் 70 சதவிகிதமும்தான் கிடைத்தன. திட்டத்தைத் தொடங்கிய பொழுது பலவகையான வேளாண்மைச் சிக்கல்கள் இருந்தன. குறைவான விளைச்சல், நிலத் தைத் துண்டாடுதல், பழமையான சாகுபடி முறைகள் என்று பல சிக்கல் கள் வேளாண்மையைத் திக்குமுக்காடச் செய்தன. இந்த சிக்கல்களைத் தீர்த்து வேளாண்மையை முன்னேற்றுவது திட்டத்தின் பொறுப்பாயிற்று.

*முதல் ஐந்தாண்டுத்திட்டம்:* முதல் திட்டத்தொடக்கத்தில் நாட்டில் உணவுப்பற்றாக்குறை இருந்ததால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நீர்ப்பாசனம், வேளாண்மை வளர்ச்சித் திட்டமாகத் தீட்டினர். மொத்த திட்ட முதலீட்டுத் தொகையான ரூ.1960 கோடியில் ரூ.291 கோடியை அதாவது 15 சதவிகிதத்தை வேளாண்மை வளர்ச்சிக்கும் ரூ.310 கோடியை அதாவது 16 சதவிகிதத்தை, நீர்ப்பாசனத்திற்கும்

செலவிட்டனர். மொத்தத்தில் திட்ட முதலீட்டில் 31% (அதாவது ரூ.601 கோடி) வேளாண்மை வளர்ச்சிக்குச் செலவிட்டனர். உணவு, மூலப் பொருட்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது திட்டத்தின் நோக்க மாக இருந்தது. நீர்ப்பாசன வசதியைப் பெருக்கியும், பொறுக்கு விதை களைக் கூட்டியும், நல்ல உரங்களை வழங்கியும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முயன்றனர்.

1950-51 இல் 54 மில்லியன் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 1955-56 இல் 65.8 மில்லியனாகக் கூடியது. திட்டதில் 61.6 மில்லியன் டன்னாக உற்பத்தியைக் கூட்டுவதெனக் குறித்திருந்தனர். உற்பத்தி குறியீட்டளவைவிட அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். திட்டக்காலத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 5.1 மில்லியன் டன்னிலிருந்து 5.6 மில்லியன் டன்னாகவும், கரும்பு, வெல்ல உற்பத்தி 5.6 மில்லியன் டன்னிலிருந்து 6 மில்லியன் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 2.9 மில்லியன் பேலிலிருந்து 4 மில்லியன் பேலாகவும், சணல் உற்பத்தி 3.3 மில்லியன் பேலிலிருந்து 5.4 மில்லியனாகவும் உயர்ந்தன. திட்ட முயற்சிகளும், சரியான பருவமழையும் சேர்ந்து முதல் திட்டத்தில் வேளாண்மை சிறந்த வகையில் முன்னேறத் துணை புரிந்தன.

*இரண்டாம் திட்டக்காலம்:* முதல் திட்டத்தில் வேளாண்மைத் துறையில் நல்ல வெற்றி கிடைத்ததால், இரண்டாம் திட்டத்தில் தொழில், போக்குவரத்து வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தனர். திட்டத்தின் மொத்த முதலீடான ரூ.4,600 கோடியில் வேளாண்மை, சமுதாய வளர்ச்சித் திட்டம், நீர்ப்பாசனம் ஆகியவற் றிற்காக ரூ. 950 கோடி (20%) ஒதுக்கினர். வேளாண்மைக்கு முதல் திட்டத்தில் செலவிட்ட தொகையைவிட இது 50% அதிகம். ஆனால் மொத்த திட்ட முதலீட்டில், முதல் திட்டத்தில் வேளாண்மைக்கு 31% ஒதுக்கியிருந்ததோடு ஒப்பிட்டால் இது (20%) குறைவாகும்.

திட்டத்தின் குறியீடுகளை அடைய முடியாவிட்டாலும் வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் இருந்தது. 21 மில்லியன் ஏக்கர் நிலத்தை நீர்ப்பாசனத்திற்குள் கொண்டு வரத் திட்டமிட்டனர். ஆனால் 16 மில்லியன் ஏக்கருக்குத் தான் நீர்ப்பாசன வசதி கொடுக்க முடிந்தது. உணவு உற்பத்தி 1955-56ல் 65.8 மில்லியன் டன்னிலிருந்து1960-61 இல் 79.7 மில்லியன் டன்னாக உயர்ந்தது. ஆனால் அடைய விரும்பிய குறியீட்டளவு 80.5 மில்லியன் டன். மக்கள் தொகை பெருகிய அள விற்கு உணவு உற்பத்தி கூடவில்லை. வேளாண்மைப் பொருட்களின் விலை உயர்ந்து பண வீக்கத்தைத் தூண்டியது. உணவுப் பொருட்களை இறக்கு மதி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் வேளாண்மைத் துறையில் இரண்டாம் திட்டம் வெற்றி பெறவில்லை யென்ற கருத்து ஏற்பட்டது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்: திட்டக்குழுவினர் இரண்டாம் திட்ட அனுபவத்திலிருந்து பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால் மூன்றாம் திட்டக்காலத்தில் வேளாண்மை உற்பத்தியை 30% உயர்த்த திட்டமிட்டனர். வேளாண்மை, நீர்ப்பாசனம், சமுதாய வளர்ச்சி ஆகிய துறைகளுக்கு திட்டத்தில் முதலில் ரூ.1,310 கோடி ஒதுக்கியிருந்த போதிலும், திட்டத்தைச் செயல்படுத்திய பொழுது, தேவை கருதி ரூ.1,754 கோடி செலவிட்டனர். இது மொத்தத்திட்ட முதலீட்டில் 20%. இந்தத் திட்டக்காலத்தில் தீவிரசெறிவு முறைச்சாகுபடியின் மூலம் வேளாண்மை உற்பத்தியை உயர்த்த முயன்றனர்.

1962 இல் ஏற்பட்ட சீனப்போரும், 1965 இல் பாகிஸ்தான ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தோன்றிய போரும் திட்டத்தைப் பெரிதும் பாதித்தன. 1965-66 இல் பருவமழை தவறியது வேளாண்மையை நிலைகுலையச் செய்தது. இதனால் உணவு உற்பத்தி 72.3 மில்லியன் டன்னாக குறைந்தது. திட்டக்காலத்தில் எதிர்பார்த்த உற்பத்தி குறியீடு 100 மில்லியன் டன். முந்திய ஆண்டில் 89 மில்லியன் டன்னாக இருந்தது திட்டத்தின் இறுதியில் 17% குறைந்தது. திட்டக்காலத்தில் உணவு இறக்குமதிக்காகச் செலவிட்டது ரூ.1,100 கோடி. மொத்தத்தில் மூன்றாம் திட்டத்தின் சாதனைகள் மனநிறைவளிப்பதாக இல்லாமையால் நான்காம் திட்டத்தை உடனே செயல்படுத்தாமல் ஆண்டுத் திட்டங்களைச் செயல்படுத்தினர்.

மூன்று ஆண்டுத் திட்டங்கள் (1966-69): ஆண்டுத் திட்டங்களில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்தனர். அதிக விளைச்சல் தரும் திருத்திய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், பலவகைப் பயிர்களின் சாகுபடி ஆகியவற்றிற்கு வேளாண்மைத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுத்தனர். மொத்த முதலீட்டுத் தொகையான ரூ.6,757 கோடியில் வேளாண்மைக்கு முதலீடு செய்தது ரூ. 1,624 கோடி. இது மொத்த முதலீட்டில் 24%. 1968-69 இல் உணவு உற்பத்தியை 102 மில்லியன் டன்னாக உயர்த்தக் கருதினர். ஆனால் உற்பத்தி 95.6 மில்லியன் டன்னாகக் கூடியது. இந்தத் திட்டக்காலத்தில் தொடங்கிய 'பசுமைப்புரட்சி' வேளாண்மை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74): நான்காம் திட்டக்காலத்தில் வேளாண்மைக்காகவும் அதனைச் சார்ந்த துறைகளுக்காகவும் ரூ.2722 கோடி ஒதுக்கியிருந்தனர். திட்டக் காலத்தில் உணவு உற்பத்தியை 98 மில்லியன் டன்னிலிருந்து 129 மில்லியன் டன்னாக (31.8%) உயர்த்தத் தீர்மானித்தனர். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் 24 சதவிகிதமும், கரும்பு உற்பத்தியில் 25 சதவிகிதமும், பருத்தி உற்பத்

தியில் 25 சதவிகிதமும் உயர்த்துவது திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

திட்டக்காலத்தில் உணவு உற்பத்தி 103.6 மில்லியன் டன்னாகத் தான் உயர்ந்தது. 52 மில்லியன் டன்னாக உயருமென்று எதிர்பார்த்த அரிசி உற்பத்தி 43.7 மில்லியன் டன்னாக உயர்ந்தது. பெரும்பாலான பணப்பயிர்களின் விளைச்சலும் எதிர்பார்த்த அளவில் உயரவில்லை. மொத்தத்தில் வேளாண்மை தேக்க நிலையில் இருக்கின்ற நிலையே ஏற்பட்டது. இதனால் தேசிய வருவாய் உயரவில்லை. மேலும் பணவீக்கம் வளர்ந்தது.

**ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்**(1974-79): மொத்த திட்ட பொதுத்துறை முதலீடான ரூ.37,250 கோடியில் வேளாண்மைக்கும் அதனைச் சார்ந்த துறைகளுக்கும் ரூ.8,083 கோடி ஒதுக்கினர். இது மொத்த முதலீட்டில் 21.1%. உணவு உற்பத்தியை 116 மில்லியன் டன்னாகவும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 10.5 மில்லியன் டன்னாகவும், கரும்பு உற்பத்தியை 150 மில்லியன் டன்னாகவும், பருத்தி உற்பத்தியை 7.5 மில்லியன் பேலாகவும், சணல் உற்பத்தியை 5.8 மில்லிய பேலாகவும் உயர்த்தத் திட்டமிட்டனர். உணவு உற்பத்தி19,78.79 இல் 131.9 மில்லியன் டன்னாக உயர்ந்தது.

இந்தத் திட்டக்காலத்தில் மிகுதியாக புஞ்சைச் சாகுபடியின் கீழ்கொண்டுவரவும். நீர்ப்பாசன சாகுபடியுள்ள நிலத்திற்கு அதிக விளைச்சல்தரும் விதைகளை வழங்கவும், 50 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் நீர்ப்பாசனம் பெறுகின்ற நிலத்தின் அளவைக் கூட்டவும் முயன்றனர்.

**ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்** (1980-85): இந்தத் திட்டத்தின் மொத்த முதலீட்டளவு ரூ.97,500 கோடி. வேளாண்மைக்கும் அதனைச் சார்ந்த துறைகளுக்கு ஒதுக்கியிருக்கும் பணம் ரூ.23,188 கோடி இத்திட்டக்காலத்தில் உணவு உற்பத்தியை 151 மில்லிய டன்னாக உயர்த்த தீர்மானித்தனர். மேலும் கரும்பு உற்பத்தியை 175.80 மில்லியன் டன்னிலிருந்து 215 மில்லியன் டன்னாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 10.20 மில்லியன் டன்னிலிருந்து 13 மில்லியன் டன்னாகவும் உயர்த்தத் தீர்மானித்தனர்.

**ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்** (1985-90): இத்திட்டத்தின் மொத்த முதலீட்டளவு 1,80,000 கோடி ரூபாய். இதில் வேளாண் மைக்காக மட்டும் 1,05,736 கோடி (58.7%) ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தியை 4 சதவீதம் ஆண்டுக்கு கூட்டுவது திட்டத்தின் இலக்காக இருந்தது. உணவுப் பொருள் உற்பத்தியை ஆண்டுக்கு 3.7% சதவீதம் கூட்டுவதும் அதன் முக்கிய குறிக்கோளாகும். மொத்த உணவுப் பொருள்உற்பத்தியை 150 மில்லியன் டன்னிலிருந்து 183 மில்லியன் டன்னாகக் கூட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்

பட்டன. இதற்காக நீர்ப்பாசனவசதி பெற்ற நிலத்தின் அளவை 11 மில்லியன் ஹெக்டேராக உயர்த்தவும், அரசு முயற்சிகளை மேற்கொண்டது.

எட்டாவது(1990-95), ஒன்பதாவது(1997-2002) ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருந்தது. 2002 இல் உணவு தானிய உற்பத்தி 211 மில்லியன் டன்களாவும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 21.16 மில்லியன் டன்களாகவும், பருத்தி உற்பத்தி 11.30 மில்லியன் பேல்களாகவும், பால் உற்பத்தி 81 மில்லியன் டன்களாவும் உயர்ந்திருந்தன. கால்நடைகள், மீன்வளத்துறையின் வருவாய் 1,70,205 கோடி ருபாய். பழங்களின் உற்பத்தி 45.50 மில்லியன் டன்களாவும், காய்கறிகளின் உற்பத்தி 90..83 மில்லியன் டன்களாவும் இருந்தன.

*சில சிக்கல்கள்:* இந்தியாவில் வேளாண்மைத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அவற்றைச் சுட்டிக்காட்டலாம். (1) இந்திய விவசாயிகள் பெரும்பாலும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவும் பழமையான மனப்பான்மையுடைவர்களாகவும் இருப்பதால் அவர்களால் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதில் முற்போக்காக ஈடுபடமுயவில்லை. (2) வேளாண்மை விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தும் அலுவலர்கள் தக்க பயிற்சின்மையாலும் நேர்மைக்குறைவாலும் சரியாகச் செயல் படவில்லை. (3) தக்க சாலைப் போக்குவரத்தும் நீர்ப்பாசன வசதிகளும் இல்லாத கிராமங்களில் வேளாண்மைத் திட்டத்தைச் சரிவரச் செயல்படுத்த முடியவில்லை. (4) வோண்மை வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற எல்லா அரசுத் துறைகளும் இணைந்து செயல் படவில்லை. இந்தக் குறைகளை நீக்கி திட்டங்களைச் செயல் படுத்தினால் நல்ல வெற்றி கிடைக்கும்.